00736

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் The Open University of Sri Lanka

தமிழ் மற்றும் தமிழ்மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி - 2024/2025

Bachelor of Arts (Honors) in Tamil and Tamil Language Teaching - 2024/2025

இறுதிப் பரீட்சை (Final Exam)

மட்டம் (Level) - 03 பருவம் (Semester) - I

LEU3307- இலங்கை சார் கற்கைகள் (Sri Lankan Studies)

மூன்று (03) மணித்தியாலங்கள்

Three (03) Hours

| | |
|---|---|
| திகதி:- 22.06.2025 | நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30 |
| Date :- 22.06.2025 | Time : 01.30 p.m - 04.30 p.m |

**அறிவுறுத்தல்கள்/Instructions**

- தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசியுங்கள்
- விடைக்குரிய சரியான வினா இலக்கங்களைக் குறிப்பிடுக
- தரப்பட்டுள்ள **ஆறு (06)** வினாக்களுள் **நான்கு (04)** வினாக்களைத் தெரிவு செய்து விடையளிக்குக
- தெளிவற்ற எழுத்துகள், எழுத்துப்பிழைகள், இலக்கணப்பிழைகள் ஆகியவற்றுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும் என்பதனைக் கவனத்திற் கொள்க

- Read the given instruction carefully
- Write the correct question numbers for the answers
- Answer only 4 Questions
- Mark will be deducted for unclear writing, spelling and grammatical errors

> முக்கிய குறிப்பு (Note) :
> **உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளின் முன்பக்கத்தில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுட்டெண்ணைச் சரியாகக் குறிப்பிடுக.**
> **At the front page in your answer sheet, mention your correct Index Number.**
> **சுட்டெண்ணைப் பிழையாக எழுதினால் உங்களால் புள்ளிகளைப் பெற முடியாது என்பதைக் கவனத்திற் கொள்க.**
> **If you write your Index Number incorrectly, marks will be not obtained.**

**தரப்பட்டுள்ள ஆறு (06) வினாக்களுள் நான்கு (04) வினாக்களை மட்டும் தெரிவு செய்து விடை எழுதுக. வினாக்களை முழுமையாக வாசித்துப், பூரணமாக விளங்கிக் கொண்டதன் பின்னர் விடைகளை எழுதவும்.**

1. அ. இலங்கையின் காலநிலையில் தாக்கம் செலுத்தும் வலய ரீதியான **இரு (02)** காரணிகளை விபரிக்குக.

**(05 புள்ளிகள்)**

ஆ. வளங்களின் முக்கியத்துவம் தொடர்பான **மூன்று (03)** விடயங்களை இலங்கையினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

**(10 புள்ளிகள்)**



15

இ. 'இலங்கையின் சனத்தொகைப் பரம்பலானது சமனற்ற முறையில் காணப்படுகிறது' இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை நுணுகி ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

2. அ. '1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு சுதந்திர இலங்கையின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும்' இக்கூற்றுக்கு வலுச்சேர்க்கும் வகையில் உங்கள் கருத்துக்களை விமர்சன ரீதியாக ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

ஆ. 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின் முக்கிய அம்சங்களை விபரிக்குக.

**(15 புள்ளிகள்)**

3. அ. ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்படட சட்டங்கள் இலங்கை சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை எடுத்துக்காட்டுக.

**(10 புள்ளிகள்)**

ஆ. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான கல்வி சார்ந்த நிறுவனக் கட்டமைப்புக்களின் வளர்ச்சி பற்றி மதிப்பிடுக.

**(15 புள்ளிகள்)**

4. இலங்கையில் பிரித்தானிய காலனித்துவக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்புக்கள் ஏற்படுத்திய சமூக பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களைக் குறிப்பிட்டு, அவற்றை விமர்சன ரீதியாக ஆராய்க.

**(25 புள்ளிகள்)**

5. 'வினைத்திறனற்ற கொள்கைகள் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குச் சவாலாகவுள்ளன.' இக்கூற்றை ஏற்றுக் கொள்கிறீர்களா? காரணங்களை எடுத்துக்காட்டி மதிப்பிடுக.

**(25 புள்ளிகள்)**

6. பின்வரும் விடயங்கள் தொடர்பாக இலங்கையை அடிப்படையாகக் கொண்டு சிறுகுறிப்பு எழுதுக.
   i. நகர சனத்தொகை வளர்ச்சி
   ii. மத்திய மலைநாடும் அதன் நிலத்தோற்றங்களும்
   iii. கொவிட் - 19 இன் பொருளாதாரத் தாக்கங்கள்
   iv. சர்வதேசத்தை நோக்கிய அண்மைக்கால இடப்பெயர்வுகள்
   v. புதிய கல்வி மறுசீரமைப்புக்கான தேவைப்பாடுகள்.

**(05x05=25 புள்ளிகள்)**

**- முழுப்பதிப்புரிமையுடையது -**



16